ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2146/2 - 2019 ඔක්තෝබර් මස 21 වැනි සඳුදා - 2019.10.21
*2146/2 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 21 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

***1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)***

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: KEG/LAN/AQUIS/A3/1/110.
அமைச்சின் இல.: 4-3/15/2016/VE/322.

கேகாலை பிரதேச செயலகப் பிரிவில், 2016 ஆம் ஆண்டில் மண் சரிவின் மூலம் அகதிகளான பொதுமக்களை மீளக் குடியேற்றுவதற்காக காணி எடுத்தல்.

உதுகொட - யட்டிதேரிய தோட்டம் எனும் காணி இணைக்கப் பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டுகளை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

சப்பிரகமுவ மாகாணத்தில், கேகாலை மாவட்டத்தில், கேகாலை பிரதேச செயலாளர் பிரிவில், இல. 56பி, உதுகொட கிராம அலுவலர் பிரிவில், பஹல யட்டிதேரிய கிராமத்தில் அமைந்துள்ள, கேகாலை நில அளவை அத்தியட்சகரின் ஆ. வ. கே. 3699 ஆம் இலக்கம் கொண்ட ஆரம்ப வரைபடத்தில் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள 5 காணித் துண்டுகளின் விபரங்கள் :

**துண்டு இல. 01 - 05**
காணியின் பெயர் : யட்டிதேரிய தோட்டம் - உதுகொட பிரிவு; உரிமை கோருவோரின் பெயர் மற்றும் முகவரி : 01. காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு, இல. 475, கனேவத்த, கடுவலை வீதி, பத்தரமுல்லை, கொழும்பு, 02. முகாமைத்துவப் பணிப்பாளர், கேகாலை பெருந்தோட்டக் கம்பனி, இல. 310, ஹய்லெவல் வீதி, நாவின்ன, மஹரகமை; விஸ்தீரணம் : 0.9839 ஹெக்டயார்.

நஷ்ட ஈடு பரிசீலனைத் திகதி :

ஆ. வ. கே. 3699 வரைபடத்தில் கே. 01 தொடக்கம் 05 ஆம் இலக்கங்களிற்காக 2019.12.05 ஆந் திகதி மு. ப. 9.30 மணிக்கு.

1A - G 31282 - 17 (2019/10)
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக மேலே குறிப்பிடப்பட்டுள்ள திகதி மற்றும் நேரங்களில், கேகாலை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 22 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கே. ஜீ. எஸ். நிஷாந்த,
பிரதேச செயலாளர் மற்றும்
காணி எடுத்தல் அலுவலர்,
கேகாலை.

பிரதேச செயலகம்,
கேகாலை,
2019, ஒற்றோபர் 16.

11 - 627